உ

சிவமயம்.

# யோரூர்ப்
# பாம்பலங்காரர்
# வருக்கக் கோவை.

இஃது

படிக்காசுப் புலவரால் இயற்றியது.

சேலம் தாலூகா பெருமாம்பட்டி

மகா-ள-ள-ஸ்ரீ

முத்துசாமிக் கவுண்டர்,

தும்பாதாளிப்பட்டி

மகா-ள-ள-ஸ்ரீ

சித்தாக் கவுண்டர்.

இவ்விருவர்கள் கேட்டுக்கொண்டபடிக்கு,

"விவேக திவாகரன்" பத்திராசிரியர்

தி. அ. முத்துசாமிக் கோனரால்,

டை யாரது

"விவேக திவாகரன்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

திருச்செங்கோடு.

1916.

விலை அணா 2.] *Registered Copy Right.* [*Price As.* 2.

உ

# ஆக்கியோன்.

---

காரூர் பொழிறிகழ் மோரூரிற் பாம்பலங் காரரின்மேற்
சீரூர் வருக்கத் துறைமாலை யன்புறச் சூட்டினனல்
நீரூர் புடவிக் கவிவாணர் வாழ்த்தி நிமிர்களந்தைப்
பேரூர் வருபடிக் காசனென் றோது பெரியவனே.

—:0:—

சிவமயம்.

# பாம்பலங்காரர் வருக்கக்கோவை.

## முகவுரை.

" தவளத்தாமரை தாதார்கோயில்
வெள்ளைப்போற்றுது மருந்தமிழ்குறித்தே".

வருக்கக்கோவை என்பது அகர முதலாகிய, மொழிக்கு முதலில் வரும் வருக்க எழுத்தை, செய்யுளின் முதன்மொழிக்கு முறையே முதலாக வைத்துப் பாடுவதாம். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கனுள் ஒன்ருகிய இன்பத்தைப் பற்றிய தமிழ் நூல்களுள் தலைமை வாய்ந்தது அகப்பொருட் கோவையென்பது. அஃதாவது:—நிலம், காலம் என்னும் இருவகைப்பட்ட முதற்பொருளும், தெய்வம் உயர்ந்தோர், தாழ்ந்தோர், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, வாச்சியம், யாழ், பண், தொழில் என்னும் பதினன்கு வகைப்பட்ட கருப்பொருளும், புணர்தல், புணர்தற்குக் காரணம், பிரிதல், பிரிதற்குக் காரணம், இருத்தல், இருத்தற்குக் காரணம், ஊடல், ஊடற்குக் காரணம், இரங்கல், இரங்கற்குக் காரணம் என்னும் பத்துவகைப்பட்ட உரிப்பொருளும் பொருந்திக், கைக்கிளையாதிய அன்புடைக் காம மாதியவாம் களவு ஒழுக்கத்தினையும், கற்பொழுக்கத்தினையும் கட்டளைக்கலித்துறையில் திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடன், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள் வகை, துறை என்னும் பன்னிரண்டகப் பாட்டுறுப்புத் தோன்றப் பலதுறைகளமையப் பாடப்படும் அரியநூலாம்.

அன்புடைக் காமத்தைக் கூறுதலால் ஐந்திணைக் கோவை எனப்படும். ஐந்திணைக்கோவையுள் பாடப்படுவோர் பாட்டுடைத் தலைவரென்றும், காமத் தலைவரென்றும் இருவராவர். அவ்விருவருள் பாட்டுடைத் தலைவருக்கு நாடு, நகரம், பெயர் முதலியவை கூறப்படும். இவ்வருக்கக்கோவையில் நூறுதுறைகளை அங்கங்கு எடுத்துக் கூறப்பட்டுளது. பேளூர்ப் பாம்பலங்கார என்வரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டிருக்கிறது.

இதனைப் பாடுவித்தவன் திருச்செங்கோட்டிலிருந்து சங்ககிரிக்குப் போகும் வழியில் 3-வது மயிலிலிருக்கும் மோரூரிலிருந்த குமாரசாமிக் காங்கேயன் எனத்தெரிகிறது. இவன் சாலிவாகன சகாப்தம் ௲௫௱௪௰௯ (கி. பி. 1627)ல் ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்தில் தாண்டவ பத்திரை விலாசம் எனும் மண்டபங் கட்டின சாசனம் அவ்விடத் திருக்கிறது. இவனின் முன்னோர் "அறுபது காங்கேயர், எழுபது தண்டிகைபாளரெனச் சொல்கிறார்கள். அதும்தான்ற இவ்வருக்கக் கோவை ௪-வது செய்யுளில்—ஆறுபத்துக்—காங்கேயர் போற்றிய மோரூர் என்றும், கண்ண குலத்தலவன் என்பது தோன்ற ௨௯-ல் மனப்பத்தியுடன்—கண்ணர் துதித்திடு மோரூர்" என்றும், கொங்கு எழுகரை நாட்டரசு செலுத்தினோர் என்பது தோன்ற ௯௩-ல் எழுகரைநாடும் போற்றிய மோரூர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது பிரபல வித்துவானின் வாக்கு ஆனதால் அச்சிடவேண்டுமென்ற ஆசை நெடுநாளாக இருந்தது. ஏட்டுப்பிரதிகள் கிடைக்கவில்லை.

பழயகோட்டைப் பட்டக்காரர் ராயபஹதூர் ஸ்ரீமான். உத்தமக்காமிண்ட நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியாரவர்கள் அனுப்பிய பிரதி ஒன்று, குமாரமங்கலம் கி. மு. ப. ஆறுமுக உபாத்தியாயர் பிரதி ஒன்று ஆக இரண்டு பிரதிகள் கிடைத்தன: இரண்டும் மிகப் பழமையாயிருந்தமையால் எழுத்துக்களைக் கண்டறிவது வெகு கஷ்டமாக இருந்தது. இவற்றைப் பார்த்து ஒருவாறு எழுதினேன். இன்னும் வேறு பிரதிகொண்டு ஒப்பு நோக்கிச் சுத்த பாடமாக்கிப் பதிப்பிக்கலாமெனக் கருதியிருந்தேன். நாள் நீடித்தலை உத்தேசித்து உள்ளவாறு பதிப்பிக்கலாயினேன். ஆய்ந்தோர் இதிலுள்ள திருத்தங்களைத் தெரிவிப்பார்களாயின் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டு மறுபதிப்பில் பிரகடிக்கின்றேன்.

இந்தமட்டில் இதற்கு இடையூறு நேராது முடிப்பித்த எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய இறைவனுடைய திருவடித் தாமரைகளைப் பிரார்த்திக்கின்றேன்.

1—1—1916,
திருச்செங்கோடு. } தி. அ. முத்துசாமிக் கோனார்.

உ

சிவமயம்

# இந்நூலாசிரியர் வரலாற்றுச் சுருக்கம்.

தொண்டை மண்டலத்திலே பொன்களத்தூர் என வழங்கிய தென்களத்தூரிலே செங்குந்தர் மரபிலே தோன்றிச் சிவாநுக்கிரகத்தால் தமிழ்க்கலை நிரம்பக் கற்றுத் தெய்வீக வாக்கினைப் பெற்று இல்வாழ்க்கையில் விளங்கினர். இவர் கி. பி. 1647—1672 வருஷங்களுக்கு இடையே இராமநாதபுரத்திலிருந்து அரசுபுரிந்த திருமலை சேதுபதி எனச்சொல்லும் இரகுநாத சேதுபதியின் சமஸ்தான வித்துவானாக விருந்தார். ஏதோ சில ஏதுக்களால் அங்கு நின்றும் நீங்கி வறுமையால் மெலிந்து வல்லம் என்னும் நகரில் மிகுந்த கொடையாளியாக விளங்கிய காளத்தியப்ப முதலியாரிடஞ் சென்று,

பெற்றுளொரு பிள்ளை யென்மனை யாட்டியப் பிள்ளைக்குப் பாற்
பற்றாது கஞ்சி குடிக்குந் தரமல்ல பாலிரக்கச்
சிற்றாளு மில்லையிவ் வெல்லா வருத்தமுந் தீரவொரு
கற்றா தரவல்லை யோவல்லை மாநகர்க் காளத்தியே.

என்றுபாடி அவராற் பாற் பசுக்களுதவப் பெற்றனர். பின்பு மாவண்டூரிலே பெருங்கொடை வள்ளலாக விருந்த கஸ்தூரிமுதலியார் குமாரர் கருப்ப முதலியார் வேண்டுகோளின் வண்ணம் "தொண்டைமண்டல சதகம்" என்னும் ஒரு பிரபந்தம் பாடி அரங்கேற்றினர். அக்காலத்தே அந்த முதலியார் செய்த அரிய பெரிய சன்மானங்களைப்பற்றி,

எவ்லப்ப னம்மையப்பன் தருதிருவேங்கடநாத னெழிற்சீராமன்
வல்லக்கொண்டயன் மாதை வெங்கடேசுரன்போல வரிசைதந்தான்
செல்லத்தம்பியருடனே கஸ்தூரிமகன் கருப்பன் றெருவீதிக்கே
பல்லக்குத்தான் சுமந்தானது நமக்கோராயிரம்பொன் பரிசுதானே.

என்பது முதலிய செய்யுட்களால் புகழ்ந்துபாடி மகிழ்ந்து, சிவதரிசனம் செய்வான் சிதம்பர க்ஷேத்திரம் புகுந்து கனக

சபாநாதரையும், சிவகாமித் தாயாரையும் போற்றிப் பணிந்து பல தோத்திரங்கள் பாட அன்பர் வேண்டியவாறு அருளும் எம்பெருமான் பஞ்சாக்ஷரப்படி மீது ஐந்து பொற்காசு வைத்தருளினர். புலவர் திலகர் அடங்கா மகிழ்ச்சிகொண்டு அருட்டிறத்தைப் புகழ்ந்து பாடினர். அது முதலாகவே "படிக்காசுப் புலவர்" எனப் பெயர் ஆயிற்று.

மிகுந்த கருணையொடு ஆதரித்தசேது வேந்தரை நினைந்து தென்னாடு சேர்ந்து இரகுநாத சேதுபதியைக் கண்டு,

மூவேந்தரு மற்றுச் சங்கமும்போய்ப் பதின்மூன்றொடெட்டுக்
கோவேந்தரு மற்று மற்றொருவேந்தன் கொடையு மற்றுப்
பாவேந்தர் காற்றி லிலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்திர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்கனே.

என்னும் செய்யுள் முதலியவற்றால் புகழ்ந்து பல சன்மானங்கள் பெற்று ஆங்கு மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர். அப்பொழுது ஆங்கு கும்பன் என்னும் புலவர் வந்து பல்லக்கு முதலிய பரிசுபெற அதுகண்டு இப்புலவர் பொறாராய்,

"ஏதை யறிவா னிவனுக்கேன் பல்லக்குச்
சேது ரகுநாத சிங்கமே—ஓதுகின்ற
கச்சைக்கும் பச்சுரைக் காய்கறிக்கா மேசவதுபோற்
றச்சக்கும் பன் சொல் தமிழ்"

என ஓர் வெண்பா இகழ்ந்துக் கூறினர். இதனைக்கேட்ட கம்பியர் குலத்தவனை கும்பன் என்னும் புலவர் சினந்து,

"தங்கை தமக்கை கட்குத் தான்புணயம் வாங்குகின்ற
பங்கமுற்ற கைக்கோளப் பையாயாம்—எங்குஞ்
செகதகுரு வென்று தேசமறி யாதோ
பகலிரவு மாராய்ந்தா பார்."

என இகழ்ந்து ஒரு வெண்பா கூறினர் என்பர்.

இதனை யோர்ந்த சேதுபதியண்ணலார் இருபுலவர்களுக்கும் சமாதானம் செய்வித்து சந்தோஷங்கொண்டனர். இவ்விரு புலவர்கள் தாங்கள் செல்லும் சமஸ்தானங்களில் ஒருவரை ஒருவர் இகழ்ந்து கூறிய செய்யுட்கள் பல.

பின்னர் தான் பெற்ற பல்லக்கு முதலிய விருதுகளுடன் சிவகங்கை சமஸ்தானத்தை யடைந்தனர். அவ்வரசரினைத்தலரான "திருமலைத் தேவர்" என்பார் புலவர்வரும் ஆரவாரத்தைச் சகியாதவராய்த் தமது பரிசனர்களை விடுத்து அழைப்பித்து அரண்மனையிலுள்ள "கிளிக்கூட்டுச் சிறையிலே" அடைத்து விட்டனர்.

> நாட்டிற்சிறந்த திருமலையா துய்ய நாகரீகா
> காட்டிற் வனத்திற் றிரிந்துழலாமற் கலைத்தமிழ்தேர்
> பாட்டிற் சிறந்த படிக்காச னென்னுமோர் பைங்கிளியைக்
> கூட்டி லடைத்துவைத்தா யிரைதாவென்று கூப்பிடுதே.

என்னும் செய்யுளைப் பாடி அவரை வசப்படுத்திப் பரிசு பெற்று அங்கு நின்று நீங்கிக் காயற் பட்டணத்தை அடைந்து அங்கு விளங்கும் "சீதக்காதி" (சையத் காதிறு என்னும் பெயரின் மருஉ) என்னும் மஹமதியப் பிரபுவைக் கண்டு,

> நேசித்துவந்த கவிராசர் தங்கட்கு நித்தநித்தம்
> பூசிக்கும் நின்கைப் பொருளொன்றுமே மற்றைப்புல்லர்பொருள்
> வேசிக்குஞ்சந்து நடப்போர்க்கும் வேசிக்கு வேலைசெயும்
> தாசிக்கு மாகுங்கண் டாய்சீதக் காதி தயாநிதியே.

எனப்பாடி அவரை மகிழ்வித்து அவர் சமுகத்திலேயே வாழ்ந்து பல பாடல்களைப் பாடிச் சந்தோஷமாகக் காலத்தைப் போக்கி யிருந்தனர். கப்பல் வியாபாரியாகிய அவ்வுபகார சிகாமணி இவ்வுலக வாழ்வை நீங்க நேர்ந்தது. அவர் பிரிவை யாற்றாத புலவர்,

> தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
> நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத் தான்றமிழ் நாவலரை
> ஓட்டாண்டி யாக்கி யவர்கள்தன் வாயி லொருபிடிமண்
> போட்டா னவனு மொளித்தான் சமாதிக் குழி புகுந்தே

என்னும் பாடல் முதல் பல பாடல்களால் வருந்தி அவ்விடம் விட்டு நீங்கினர். இந்தச் சீதக்காதியின் சமாதி, இராமநாதபுரத்தைச் சார்ந்த கீழக்கரை என்னும் கடற்கரைப்போரா நகரில் வழுவழுப்பான கருங்கல்லாற் செய்த வேலைப்பாடாக நல்ல நிலையில் இன்னுமிருக்கின்றது. அங்கு நின்று நீங்கிய புலவர் திருச்செந்தூர் முதலிய திவ்விய தலயாத்திரை யாகப்புறப்பட்டு அங்கங்கு அருமையான பாக்களால் தோத்திரம் செய்துகொண்டு பாண்டிநாடு கடந்து, கொங்குநாட்டை அடைந்து பேரூர், திருமுருகன் பூண்டி, அவிநாசி முதலிய தலதரிசனம் செய்து கொண்டு பல்லக்கு முதலிய விருதுகளுடன் யாத்திரை புரிந்தனர். இந்தப் பெருமையைச் சகியாது கொங்குநாட்டு புலவர்களிற் சிலர் பொறாமைமேலிட்டிருந்தார்கள். ஆனால் சந்தப் பாக்கள் முதலியன பாடுவதிற் சமர்த்தராக அங்கு அக்காலத்திலே பலரிருந்ததாகவும் தெரிகிறது. அந்தப் பிரதேசத்திலே "மசக்காளி மன்றாடி" என்பவ ரொருவரிருந்தார். அவர் சமுகத்தே படிக்காசுப் புலவருக்கும் அந்நாட்டுச் சில புலவர்களுக்கும் கல்விப் போர் நடந்தது. அதற்குச் சான்றாகக் **கோங்கு மண்டல சதகத்**துள்ள ஒரு செய்யுளை இங்கு கொடுக்கிறேன்.

நல்லார்புகழ் மசக்காளி கவசையில் நாவில்வசை
யெல்லாஞ்சொலி நிலைநில்லாமற் பல்லக் கிரவை பற்றிச்
சொல்லாலுயர்ந்த படிக்காசன் கட்டிச் சுமக்ககவி
வல்லாரடித்துத் துரத்தியதுங் கொங்கு மண்டலமே

எனக் கண்டிருக்கிறது.

அஞ்சாவிமக்களுஞ் சாணரும் பாணரு மம்பட்டருஞ்
செஞ்சாயக்காரரும் வேசையர் மக்களுஞ் செந்தமிழைப்
பஞ்சாகப்பண்ணி யொருகாசுக்கோர் வண்ணம் பாடலுற்றார்
நஞ்சாகப்போச்சுதையோ வென்றமிழ் கொங்கு நாடெங்குமே.

என வருந்திக் கூறிக்கொண்டு அங்கு நின்றும் கிழக்கு நோக்கிக் காவேரி நதியைக் கடந்து, முன்பு பகைகொண்டு வாதமியற்றிய புலவர்கள் செய்த சூனிய வித்தையால் வருந்திக்

திருச்செங்கோடு என்னும் திருப்பதியை யடைந்தனர். "அவ் வினைக்கிவ்வினையாம்" எனத் திருஞானசம்பந்த வள்ளலார் ஓதி யருள அடியார்களைப் பற்றிய நளிர்சுரம் நீங்கப்பெற்ற தலமெனத் தேர்ந்து "வருகைப் பதிகம்" என ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் மீது ஒரு பதிகமியற்றிக் குணமடைந்து, நாகமலையேறிப் பால் வண்ணத் திருமேனியைக் கண்குளிரக் கண்டு, உருகி, ஆனந்தம் பெருகித் துதித்து "உமைபாகப் பதிகம்" ஓதி மகிழ்ந்தனர். அவ்வாலயத்தைச் சித்திரக் கற்பணியா லலங்கரித்தவர்களும், தமிழில் பல அரிய பிரபந்தங்களைக் கேட்டவர்களும் ஆகிய உபகாரிகள் சமீபத்திலுள்ள மோரூரிலிருக்கிறார்களெனக் கேள்விப்பட்டு அங்குப் பிரயாணமாய் அவ்வூரின் சமீபத்துச் சென்றனர். அவ்விடத்தே ஒரு நீர் தேங்கு மடையிருந்தது. அதனருகே மோரூர்க் குமாரசாமிக்காங்கேயரின் சமுகவித்துவானுன பாகம் பிரியாளென்னும் புலவர் நின்றிருந்தார். அவரை நோக்கி, "ஐய, நீங்கள் குடியிருப்பு எந்தவூர்" என்றனர். படிக்காசுப் புலவரெனத் தெரிந்துக்கொண்ட அப்புலவர்,

"பூதத்துணை கொண்ட போர்வாணன் மாறனிரு
பாதத்துணை காணப் பண்ணினோர்—ஓதுமிசை
ராமா யணங்கேட்டோர் நாவலர்வைப் புப்பொருளாங்
கோமான்வாழ் மோரூர் குடி"

என இதனைக்கேட்ட படிக்காசர் உளமகிழ்ந்தவராய் அப் புலவரை நோக்கி மோரூர் என்று பெயர் வந்த காரணம் யாதோ? என அப்புலவர்,

"நான் மறைப்பண் கேட்டுருகு நல்லான் மடிவழியும்
பான் மடை யீதைய பலகலைதேர்—வான்புலவர்
மாருகத் தாற் கடைய வாய்க்கா லெனப்பெருகு
மோரூரா மென்றூர் முனம்"

என்று கூறினர். கேட்டு வியந்த படிக்காசுப் புலவர், பாகம் பிரியாப்புலவரைத்தழுவ இருவரும் சந்தோஷ முகமன் பேசிக்கொண்டு ஊர்க்குட் சென்றனர். இவர் வரவை அறிந்த

காங்கேயன் என்பார் எதிர் நின்று உபசரித்து அழைத்து மாளிகையுட் சென்று குசலம் வினவி மகிழ்ந்தனர்.

பின்பு அவ்வூரில் எழுந்தருளிய "ஸ்ரீபுஜங்க பூஷணர்" என்னும் பாம்பலங்காரர் மீது வருக்கக்கோவை பாடினர். பாம்பலங்காரர் கோயிலில் வித்வ சபை ஒன்று கூடிற்று. அரங்கேற்றினர், கேட்டோர் சந்தோஷ முற்றார்கள். அங்கிருந்த, "பாகம்பிரியான் என்னும் புலவர்,

கட்டளைக்கலித்துறை.

காரூர் பொழி திகழ் மோரூரிற் பாம்பலங் காரரின்மேற்
சீரூர் வருக்கத் தொடைமாலை யன்புறச் செப்பினனல்
நீரூர் புடவிக் கவிவாணர் வாழ்த்த நிமிர்களந்தைப்
பேரூர் வருபடிக் காச னென்றேது பெரியவனே.

என்று புகழ்ந்து பாடினர். இருந்த புலவருக்கு உபசாரத்துடன் சன்மானங்கள் செய்த உபகாரியைக்குறித்துப் படிக்காசுப் புலவரும்,

கட்டளைக் கலித்துறை.

அந்திப் பிறைச்சடை யாரர வாசல ராலயத்திற்
கந்தப் பிரான்கதை கற்சிலை யாலமை காங்கெயரில்
விந்தைப் புயக்கும ரேந்திர வேந்து வியந்தெமக்குத்
தந்தச் சிவிகை கொடுத்தான் பெரும்புகழ் தாங்கினனே.

எனப் புகழ்ந்து பாராட்டினர். பின்பு பிரயாணத்துக்கு விடைபெறப் புலவர் சென்று பேசிக்கொண்டிருக்கும்பொழுது அக் குமாரசாமிக் காங்கேயரின் சிறுமி தகப்பனாரைப் பார்த்து, "அப்பா இவர் பாட்டு அழகா இருந்தது அதை இப்போது சொல்லச் சொல்லே" எனச் சிரித்துக்கொண்டு மழலைச்சொல்லால் கேட்டனள். இவ்வார்த்தைகேட்ட படிக்காசர் ஐயா, வருக்கக்கோவையில் ௬௬-வது செய்யுளில் "...கல்லுங்கவி சொல்லும் யோரூர்....." என்ற செய்யுளைப் பிரசங்கிக்கும்பொழுது சபையினரெல்லீரும் அதிசயித்துச்சிரித்தீர்கள். இப்பொழுது இந்தச்

சிறுபெண் பேசியதே குறள்வெண்பாவாக இருப்பதைக் கவனித் தீர்களா?

" அப்பா விவர்பாட் டழகா விருந்ததனை
இப்போது சொல்லச்சொல் லே"

என்றமைந்துகிடக்கின்றது. இவ்வளவு பழக்கமாவதற்குக் கல்விப் பழக்கம் எவ்வளவிருக்கவேண்டும். இப்படியில்லாமலா? கற்றோருக்கு வாரி வாரிக்கொடுத்து எத்தனையோ பிரபந்தங் களை உங்கள் பெரியோர்கள் கேட்டிருக்கிறார்கள் என வியந்து பாராட்டி விடைபெற்றனர்.

பின்னர் அங்கு நின்றும் சிவிகையேறிப் புறப்பட்டுக் கிழக்கு நோக்கிப் பல தலதரிசனம் செய்துகொண்டு தண்டலை நீணெறி எனும்தலத்தையடைந்து அங்குள்ள அன்பர்கள் வேண் டிக்கொள்ளத் "தண்டலையார் சதகம்" என ஒரு சதகத்தை அருளிச்செய்து சந்நிதானத்தில் அரங்கேற்றிப் பரிசும் பெற்று வாழ்ந்திருந்தனர், பின்பு சென்னட் சென்றபின், திருத்தருமபுர வாதீனத்தில் ஞானாசாரியாராக எழுந்தருளிய குருமூர்த்திகள் உளி க்குமாறு அணுக்கத்தொண்டராகவிருந்து, அவ்வாசாரியர் அநுக் கிரகித்தவாறு வைத்தீஸ்வரன் கோவில் கட்டளை நடத்திக் கொண்டு "படிக்காசுத் தம்பிரான்" எனப் பிரசித்தமாக விளங்கி வரும் நாளில், "புள்ளிருக்கும் வேளூர்க் கலம்பகம்" என ஒரு அரிய பிரபந்தம் பாடி சந்நிதியில் அரங்கேற்றி அங்கு வசித்தி ருந்தனர். முன்னர் தமக்குப் படிக்காசு பாலித்த சிற்சபாநாதர் ஸ்ரீபாதத்தொண்டு செய்யக்கருதி சிதம்பரத்தையடைந்து சிற் சபேசரை தரிசித்துக்கொண்டு பாமாலை சூட்டி ஞானநுபூதி பெற்று நடராஜாது குஞ்சிதபாத நிழலையடைந்தனர்.

வெண்பாவிற்புகழேந்தி பரணிக்கோசயங்கொண்டான் விருத்தமென்னும்
ஒண்பாவி லுயர்கம்பன் கோவையுலா வந்தாதிக் கொட்டக்கூத்தன்
கண்பாய கலம்பகத்தி லிரட்டையர்கள் வசைபாடக் காளமேகம்
பண்பாயபகர் சந்தம் படிக்காசலா லொருவர் பகரொணாதே.

---

தி. அ. முத்துசாமிக் கோனார்.

உ

திருச்சிற்றம்பலம்.

மோரூர்ப்

பாம்பலங்காரர்

# வருக்கக் கோவை.

## காப்பு

கட்டளைக்கலித்துறை.

பரிதி புகாப்பொழின் மோரூரிற் பாம்பலங் காரர்தன்மேற்
சுருதிய தான தமிழால் வருக்கத் தொடைசொலவே
சரிதைய தாகத் திருமாலும் வேதனுந் தாள்பணியக்
கருதிய கம்பத்திற் செல்லவி நாயகன் காப்பெமக்கே.

காட்சி.

அமுதம் பொழிந்த குவளைசெங் காந்தளரம்பை கஞ்சங்
குமுதங் குமிழ்வள்ளை வேயுங்கொண் டேபசுங் கோங்குதென்னை
கமுகுஞ் செறிவயன் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
றமிதம் பொழிமலர்க் காவூ டொருவல்லி தோன்றியதே. க

ஐயம்.

ஆடக மோவரை யோதிரையோ கமலாலயப் பூந்
தோடக மோபணி நாடகமோமலர்ச் சோலைகளோ
காடக மோதிய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
வடக மோதுபொற் பாடக மாதினுக் கேதிடமே. உ

துணிவு.

இங்கைய மேதினிப் பாதமுஞ் சாந்து மிணைவிழியுங்
கொங்கையும் வல்லியுங் கூந்தலின் மாலையுங் கொன்றைதிங்கட்
கங்கையுஞ் சூடிய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பங்கைய மேவு புவிமாதென் றின்று பகர்ந்திடவே. ங

குறிப்பறிதல்.

சங்கய லான திரண்டான பார்வை யிவரிடத்தி
லாங்கயல் போவெனு மொன்றென்று வாவெனு மாறுபத்துக்
காங்கயர் போற்றிய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
றோங்கைய ராலு மொழியப் படுமிது மோசமன்றே. ௪

இரந்து பின்னிலை நிற்றற்கெண்ணல்.

உளத்திற் பிறந்த மயலெனும் வெப்ப முயர்கலவிக்
குளத்திற் குளித்தன்றி நீங்காமுந் நீரிற் கொதித்தநஞ்சைக்
களத்திற் றரித்தவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
றளத்திற் கமலை தனையிரப் போநந் தனிநெஞ்சமே ௫

இரந்து பின்னிலை நிற்றல்.

ஊரும் புனற்கயற் கண்வாளி தைத்தென் னுடற்குருதி
சோரும் படிகண்டு மாற்றுகி லீர்வரை தோயுமெழு
காருந் தியபொழின் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
றருந்து பூங்குழ லார்க்கில்லை யோநெஞ்சிற் றண்ணளியே. ௬

முன்னிலை யாக்கல்.

எந்தனை வேள்பொரக் கண்டேநுந் நெஞ்சி லிரங்கிச்சற்றும்
நிந்தனை யொன்றும் பகராம லேநெடு வேறரித்த
கந்தனை யீன்றவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
வந்தனை யெந்தனைச் சிந்தனை தீர்த்தின்று வாழ்விக்கவே. ௭

மெய்தொட்டுப்பயிறல்.

ஏர்க்குங் குமமுலை யோவதி பார மிதுவுமல்லாற்
கோக்குந் தரள வடத்தையும் பூட்டினர் கூருகிராற்
கார்க்குஞ் சரஞ்செற்ற மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பார்க்கும் பொழுதளி காளிடை நேர்கிற் பழிநுமக்கே. ௮

முறுவற்குறிப்புணர்தல்.

ஐயம் புகுங்கொடி யாற்றினின் மூழ்கி யமரின்மித
வையொன்று வந்தெய்தும் வாறெக்கு மேகரு மாவிழவே
கையம்பு தொட்டவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
செய்யப் புயமல ரானனத் தாடன் சிறுநகையே. ௯

புணர்ச்சியின் மகிழ்தல்.

ஒருமா தவரு மறியாத வானந்த முற்றதுமுன்
னருமா தவமெனச் செய்தவ யோகச்சி யந்நகரிற்
கருமாரி கண்டவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பெருமா னிடத்தில் வருமா நலமின்று பெற்றிடவே. க0

அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்.

ஓதியின் மாலையுங் கொங்கையிற் பூணுமுடையு மெய்யிற்
போதியலாகமுன் போலணிந்தேன் மதி போன்றசங்கங்
காதியலாயணி மோரூரிற் பாம்பலங் காரர் வெற்பி
லாதியின் மாது தனக்கிளை யாய்தணி யையத்தையே. கக

இடமணித்தென்றல்.

ஔவர வக்கிரி மேனின்று வீழ்ந்திடு மத்திவலை
யிவ்வன சக்கிரி மேலேதெறிப்ப வினை மதியைக்
கவ்வர வப்பணி மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மவ்வ னகைத்திரு வேயுமதூர்க் கெமர் வாழ்பதியே. க௨

பிரிந்துவருகென்றல்.

கற்பகக் காசுரர் மாளப் பொருவயிற் கண்ணியையிங்
கற்பக லாக வுனைப்பிரி யேன்வினங் கண்டமுட்டக்
கற்பகக் காவளர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
கற்பகத் தாயிங் கிருவரு வேணிக் கணந்தனிலே. க௩

தலைவனீங்கப் பொருது தலைவி நினைந்திரங்கல்.

காமந் தவிரென் றுறநெடு நேரங் கருதியெமக்
காமன் புரைத்தன வெல்லா மறந்திங் கடற்பொருவிற்
காமன் றனைச்செற்ற மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
காமன் புவிமன்ன ரிப்போது நீங்கக் கருதினரே. க௪

ஆயத்துய்த்தல்.

கிளையாமுன் சங்கத் துடன்கூடி நீபிக் கிரியிடத்தில்
விளையா டரைக் கணத் தேவரு வேன்வளி மேவுசெல்வங்
களையா துளர்க்கருள் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
வளையா டுசெங்கை யுடைசோரத் தாங்கிய வாறெனவே. க௫

தலைவன் பாங்கனைச் சார்தல்.

கீலன் பிரிக்கவுங் கூட்டவு மின்பங் கிளர்ந்திடவு
மாலன் புறுதுயர் மாற்றவுந் தேற்றவு மார்க்கண்டர்க்காய்க்
காலன் றனைச்செற்ற மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
ஞாலன் றனது துணைநமக் குண்டு நுவல்வதற்கே. கசு

பாங்கன் தலைவனை யுற்றது வினாதல்.

குறிக்கும் பணைர்சம ரொன்னார்க்குத் தோற்றுங் குறைந்தனையோ
வெறிக்குஞ் சரத்தின் மெலிந்தனை யோவனை வேடனெச்சிற்
கறிக்கன்பு பூண்டவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
எறிக்கும் வெயிலின்மன் னாவின்று மேதுக் கிளைத்தனையே. கஎ

தலைவன் உற்றதுரைத்தல்.

கூரிய வேல்விழிப் பார்வையி னாலுங் குளிர்ந்தமொழி
யாரிய லாற்செயு மாய்கையி னாலு மடியவர்தங்
காரிய மென்றவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
போரிய லானவென் வீரிய மாறிப் புறகிட்டதே. கஅ

பாங்கன் றலைவனைப் பழித்தல்.

கெசஞ்சத கத்திர ளேவங் கெலித்திடுங் கேசரியோ
ரசங்கத லிக்கவன் றஞ்சின வாறொப்ப தாகுமுயல்
கசங்கமி தித்தவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
புசங்க விளைத்தது நீயிறை யேயொரு பூங்கொடிக்கே. ககூ

தலைவன் பாங்கனை முனிதல்.

கேணித் திலநகை யார்தந்த காதற் கிரீடையினா
னாணித் தளர்தல்கண் டஞ்சலென் னாதுவிண் ணாட்டினர்க்குக்
காணித் தலந்தரு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லாணிப் படுபுண்ணிற் காரம்வைத் தாங்கின் றைறந்தனையே. உ0

பாங்கன் தன் மனத் தழுங்கல்.

கைக்கும் விடமன்ன கண்ணாளைக் காவினிற் கண்டுருகு
கைக்கிங் கினியென யான்சொலு வேனெற்றிக் கண்ணகைசெங்
கைக்குங் கனலியர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
கைக்குஞ் சரம்பரி தே ராதுலர்க்கருள் காவலனே. உக

தலைவன் பாங்கனை முனிதல்.

கொங்கைக் குறியு மதரக்குறியுங் கொடியிடையாள்
செங்கைக் குறியுங்கண் டாற்றுவ ரோ திருச் செஞ்சடைமேற்
கங்கைக் குறிவைத்த மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லங்கைக் குறியைந்தும் வேளா கமமு மறிந்தவரே. உஉ

பாங்க னெவ்விடத் தெவ்வியற் றென்றல்.

கோக னகத்திரு வன்னா ளுறையுங் குளிர்புனமும்
வாக தெனச்செய் யியலான தொன்றை மணிக்கிரிமேற்
காக மெரித்தவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லாக மகிழ்ச்சி பெறவரு ளாயெனக் காண்டகையே. உ௩

அவ்விடத் தவ்வியற் றென்றல்.

கௌவணி நீல மிருகாற் றமனியங் கைக்கொடந்தக்
கௌவ ணெறியுங் கல்கோ மேதகங்கருத் தொன்றடியார்
கௌவன மாற்றிய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
கௌவர வீன்ற மணிக்கா லிதணிற்குங் காரிகைக்கே. உச

பாங்கன் றலைவனைத் தேற்றல்.

சங்காழி சூழ்புவி யின்காவ லாவுன் றனக் கனத்த
வெங்கா தல்தந்த ருளுங்கோ தையைக்கண்டு மீளமட்டுங்
கங்காள ரூபியர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மங்காம லிங்கிருன் பொங்கார மான வருத்தமற்றே. உரு

பாங்கன் றலைவியைக் காண்டல்.

சாந்தமு லாவும் புனமுமிதே மன்னர் தாமுரைத்த
வேந்திழை யாவது மிங்கிவரே யிருணிக்கு மிந்த்ர
காந்தம தாமகிழ் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
ஞந்தளா ரத படியேவந் தெய்தினர் நன்னெஞ்சமே. உசா

பாங்கன் றலைவனை வியத்தல்.

சித்தந் திரும்பியென் பால்வந்த வீரத்தைச் செப்பவற்றோ
முத்தம் புனையுந் தனத்தாளை நீங்கிச்செய் முத்தொழிற்குஞ்
சுத்த னெனவந்த மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
புத்தம் புதுமலர்க் காவூடு ளர்தம் புரவலனே. உஎ

இகழ்ந்தற் கிரங்கல்.

சீதப் பரிமள மார்பனை நாம்வசை செப்பல்புல்லர்
வேதப் பொருளைப் பழித்தன வாமொருக்கும் வில்விசயன்
காதப் படைதந்த மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லேதப் படவின்றி யாமறி யாம லிகழ்ந்ததுவே. ௨௮

பாங்கன், றலைவன் றனக்குத் தலைவி நிலைகூறல்.

சுண்ண நிறைந்த மலர்ப்பூங் குழலுங் துடியிடையும்
பண்ணமர் சொல்லுமிக் காவிற்கண் டேன்மனப் பத்தியுடன்
கண்ணர் துதித்திடு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
வண்ண மலர்ப்புயு மன்னு கமல வனிதையையே. ௨௯

தந்தெய்வந் தருமெனச் சேரல்.

சூரூருங் காவி லிவர்வரு வாரெனத் தோன்றிலமே
ஏரூர் குழலியை முன்றந்த தெய்வ மினந்தருமே
காரூருங் காவளர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
போரூரும் வாட்கண்ணி வாரூருங் கொங்கை புணருதற்கே. ௩௦

இறைவியைக் காண்டல்.

செல்லும் பொழுதெவ் வணங்காண்ப தென்று திகைக்குநெஞ்சே
சொல்லும் புனமு மிதனுங்கண் டேநட்ட தூணிரையிற்
கல்லுங் கவிசொல்லு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லல்லும் பகலும் பிரியாம லேவிளை யாடுதற்கே. ௩௧

புணர்ச்சியின் மகிழ்தல்.

சேர்ந்தனை மீதி லநுபோக மோகஞ் செலுத்தியின்ப
நாந்தணி யாத மயல்தணிந் தோம்வள்ளி நாயகிபார்
காந்தனை யீன்றவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லேந்திளங் கொங்கை மயிலே குறைநமக் கேதினியே. ௩௨

புகழ்தல்.

சைவ முதலென வேவந்த வாறு சமயத்துக்குந்
தெய்வங் குருவுமை யன்றியுண் டோநற் சிவாகமநூற்
கைவந் தவர்தொழு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மெய்வந்த வின்ப வநுபோக மோகம் விளைவிக்கவே. ௩௩

# வருக்கக் கோவை.

தலைவியைப் பாங்கியொடு வருகெனப் பகர்தல்.

சொற்றான் மலைவினி யான்சொலப் போவதென் றோழியுட
னற்று மரைமயிலே வருவாய் செய்ய நான்மறைநூல்
கற்றோர் துதித்திடு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மற்றொரு மேதினி யீர்நாளையாள வரும் பொழுதே. ௩௪

பாங்கி ஐயமுற்றோர்தல்.

சோலையி னும்விளை யாடு மிடந்தொறுஞ் சுற்றிச்சுற்றி
மாலையம் போதுமட் டாய்த்தேடி னேன்மற்ற யோர்கடிரி
காலையும் போற்றிய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
சேலயில் வாளம் பரவிழி யாயெங்கு சென்றனையே. ௩௫

பாங்கி யயர்த்து வினாதல்.

சௌவா னிறைந்த துடியிடை யாயுன் றனக்கொரின்ப
மெவ்வா றெனக்கறி யாதுவந் தெய்திற் றிராக்கதிரைக்
கௌவ் வடரவணி மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
செவ்வாய் திறந்தெனக் கவ்வா றதனையே செப்புகவே. ௩௬

தலைவி மறைத்தல்.

ஞாலத் திதுபலர் கேட்கிலென் சொல்வர்பன் னாளுமெந்தன்
சீலத்தை நீகண் டறிந்தே யிருக்கவுஞ் சிந்தித்தவக்
காலத்தின் முன்வரு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
னீலத்தைப் பூட்டு மவர்போ லுரைத்தனை நேரிழையே. ௩௭

தலைவி கொடுஞ்சொற் சொல்லல்.

ஞெண்டுகண் டஞ்சரி போலாக நன்றின்று நீருரைத்த
சொண்டுகண் டாவி யறக்குறைந் தேன்றுற வோர்மனத்திற்
கண்டுநின் றேத்திய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
வண்டுகொண் டாடுங் குழலீ ரிவ்வார்த்தை மறந்தருமே. ௩௮

தலைவியைப் பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

ஞொள்குஞ் சசியை நிகர்நுதலா யுந்த னூபுரக்காற்
கொள்கும் பரண்மிசை கூடில வேமலர்க் கோகனகக்
கள்குங் குமநிறை மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
றெள்குந் தளப்பணி மின்னேந மக்குச்செல் லாதிதுவே. ௩௯

தலைவி சுனைபாடிய துரைத்தல்.

தனியே யுனைவரக் காணும லேயிந்தத் தார்பொழிற்குட்
பனியே நிறைசுனை யாடிவந் தேன்கயல் பாய்ந்திடமாங்
கனியே யுதிர்வயன் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லினியே துணையன்றி வேறுள தோதுணை யென்றனக்கே. ௪0

சுனை வியந்துரைத்தல்,

தாநன்பு கூரத் தருமோ வதரந் தனிற்சிவப்பைப்
போதம் பரவிழி தான்வாங்கு மோமடற் பூகம்விண்டு
காதம் மறைத்திடு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மாதந் திரிச்சுனை யாங்காண வின்று வருகுதுமே. ௪௧

மான் வினாதல்.

திருகிரு கோட்டட னென்கையில் வாளி திறந்தபுண்ணோ
டொருகலை நீர்வரக் கண்டிலி ரோதுற வோர்கண்மனங்
கருதியே வாழ்த்திடு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மருவளர் பூங்குழ லீரிருங் கான வனந்தனிலே. ௪௨

பாங்கி தலைவியைக் கொடுஞ்சொற்கூறல்.

தீராதி தீர ரிவரையின் னாரெனத் தேறுகிலேன்
மோரார் தனவல்லி யேயுரை யாயுமை வேண்டமுன்னாட்
காரானை யானவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
சோரா தெனக்குச் சொலநீதி யோசொலுந் தோழியர்க்கே. ௪௩

தலைவி பாங்கியைக் கொடுஞ் சொற்கூறல்.

துணையாய் விரும்பி யிரவும் பகலுமிச் சோலையிலே
யிணையா யிருக்கவு மீதுரைத்தாய் சங்க மேந்தரியைக்
கணையாய்த் தொடுத்தவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பிணையா யிதற்கிங் கிணையா யினியென் கொல் பேசுவதே. ௪௪

வேழம் வினாதல்.

தூரிகை யாலும் வரையவொண் ணாத துடியிடையீர்
பாரிபக்காய முடன்சோரி சோரப் பரதவிதங்
காரிகை யார்பயின் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
கூரிய வாளி யுடன்வந்த தோவொரு குஞ்சரமே. ௪௫

மொழி வினாதல்.

தெண்டிரைக் குள்ளெழுந் திங்களி லூறிய தெள்ளமுதங்
கொண்டிருக் குந்திரு வாய்மலர்ந் தான்மனங் கொண்டபத்தி
கண்டிரக் கந்தரு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
வண்டிருக் குங்குழ லீர்சிந்து மோவந்த வாய்முத்தமே. ௪௬

எதிர் மொழி கொடுத்தல்;

தேனேறு தார்ப்புய மன்னு வுனக்கிணை செப்பில்வெள்ளை
யானேறு வாரன்றி வேறறி யோமெருக் காத்திதும்பை
கானேறு கொன்றையர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மானேறு வேழுஞ் சிலையாழி யன்றி வதைப்பதற்கே. ௪௭

பிறை தொழுகென்றல்.

தைய லிடத்தர் திருச்சடை மீதிற் றரித்தபிறை
மெய்யி தெவர்க்குந் தொழக் கிடையாமரு வெண்டலைமான்
கைய தனிற்பரி மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
செய்ய மலர்க்குழ லாய்குவிப் பாயுன் செழுங்கரமே. ௪௮

நடுங்க நாட்டம்.

தொடுக்குங் கணைவிழி யாய்நம் புனத்தெரு தோன்றறனை
யெடுக்கும் பொழுதுகண் டேனவர் வாள்பட் டிருங்கடலிற்
கடுக்கண் டணிந்தவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
நடுக்கண்ட துண்ட மிரண்டாக வீழுங்கை நாகத்தையே. ௪௯

உட்கோள் சாற்றல்.

தோரண மாக நவமணி மாலை தொடுத்திடுகோ
வாரண மாமுலைக் கச்சணி கோபொன் வளையல்விற்க்
காரண மாய்வந்த மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பூரண மான் மதிமுகத் தீரொன்று போதியுமே. ௫0

குலமுறை கிளத்தல்.

தெள்வைக் கொடிகம லத்தோன் கொடிக்குச் சரிவருமோ
வெவ்வயில் வேடர் கொடியிவ ணீமுடி வேந்தடியார்
கௌவை யுறுதருண் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லெவ்வகை நன்மணங் கூடிய வாறெம் மிறையவனே. ௫௧

தலைவன் தலைவியை மேம்பட வுரைத்தல்.

நஞ்சத் துடன்வந்த மாணிக்க மீது நமைக்கொ லுமென்
றஞ்சிப் பழித்திங் ககற்றுவ ரோவணங் கேவணங்கிற்
கஞ்சப் பதந்தரு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
னெஞ்சத் துகந்து முடிமேற் புனைவர் நிருபர்களே. ருஉ

பாங்கி யறியாள்போன்று வினாதல்.

மாலா கலைகளும் வல்லமன் னுவிந்த நாகவனத்
தேலார் குழலிய ரெண்ணில ரேயெம ராசனைத்தன்
காலா லுதைத்தவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மேலான நீயிங்கு மாலான தார்க்கு விளம்புகவே. ருங

தலைவன் இறைவி தன்மை விளம்பல்.

நிலையே புனத்தந் நிலையே குணநெடி யோன்றுயிலா
விலையே யுதர மிலையே மருங்குலென் னுளுமெண்ணெண்
கலையே பயிற்றிய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லலையே நயன மலையே பயோதர மாங்கவட்கே. ருச

பாங்கி பேதைமை யூட்டல்.

நீரிற் குடத்திங் கொருத்தியென் றேதன் னிழலைக்கண்டு
வாரிப் பிடிக்கக் கருதுமிப் பேதைக்கு வாவிதொறுங்
காரிற் குழாம்படி மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
போரிற் சிறந்தகை வேலண்ண லேமயல் பூட்டினையே. ருரு

தலைவன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்.

நுண்மதி யாசற நீயுமவ் வாறு நுவலுமென்ற
துண்மதி யார நலமே விளைத்த துணர்ந்துமிடக்
கண்மதி யானவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பெண்மதி யானுரைத் தாயணங் கேசிறு பேதையென்றே. ருசு

பாங்கி மறுத்தல்.

நூலினு நொய்ய மருங்காளுக் கின்சொ னுவலவென்ற
னூலினி தல்ல வளவன்றன் சேயைமுன் னுளிரதக்
காலில் வதைத்தவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மாலினி தானமன் னுதவி ரீரிவ் வசனத்தையே. ருஎ

தலைவன் மடலைத் தன்மேல் வைத்துச் சாற்றல்.

நெடுநாண் மலர்தறை கொண்டு நின்றேயிந்த நீடுபரம்
படுநா ணுமைவிட்டுப் போவதுண் டோசடா பாரமதிற்
கடுநாகம் பூண்டவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
வடுநாளைக் கொண்டு வருவேன் பொதுவின் மடலெடுத்தே. ருஅ

என்னை மறைத்தபினெளிதென நகுதல்.

நேசக் கடற்கண் மரக்கல மோட்ட நினைந்தனையால்
வாசப் படாகமுங் காணுமுண் டேன்மணி வாய்த்தபிர
காசத் திருமதின் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
வேசத் திமைகுன்ற மீகாமனை யென்கொல் வேண்டுவதே. ருகூ

தலைவன் பாங்கியைப் பழித்தல்.

நையும் படிபுனக் கிங்கேர மின்சொ னவின்றதெல்லாம்
வெய்யி லிடுமஞ்ச ளாயின வோகதிர் வேலனுடன்
கைபைந் தனைத்தரு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மையுண் கடலிற் பெருங்காயந் தோய்த்திட்ட வாறெக்குமே. கூ0

பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்.

நொடிக்கும் பொழுதும் பிரியார்கள் கானவர் நொய்யரின்சொற்
படிக்குங் கிளியு மகலாது பைம்புனம் பான்மதியைக்
கடிக்கு மராவணி மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
துடிக்குங் கொடிக்கு நிகர்மருங் காட்கெங்ஙன் சொல்லுவதே. கூக

தலைவன் தலைவி எளிமை கூறல்.

நோவான வென்பெயர் நீயொரு சற்று நுவன்றமட்டே
பூவாச மேவு குழலா ளெதிர்வந்து போற்றிமலர்க்
காவா ளிழலுறை மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
யாவா வெனாவழைத் தின்சொல் சொல்வாடன் மனமகிழ்ந்தே. கூஉ

பாங்கி உலகிய லுரைத்தல்.

நௌவிய தானகட் பூங்கோதை மாதர்க்கு நாட்டமுற்றோர்
செவ்விய தாக வரைந்து கொள் வார்கள்வெண் டிங்கடன்னைக்
கவ்விய பாம்பணி மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லவ்விய நீக்கு முலகத்தெல் லாரு மறிந்திடவே. கூ௩

தலைவனைப் பாங்கி வருகென்றல்.

பரிகரி தேர்வல்ல மன்னவ னேமனம் பற்றினையால்
வரிவிழி யாளை வரைந்துகொ ணீமுன் மகத்தெழுந்த
கரியுரிப் போர்வையர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
விரிகடல் சூழும் புவியோ ரறிய விருப்பமுற்றே. ௬௪

தலைவன் மறுத்தல்.

பாந்தள் கடித்துத் தலைக்கொண்ட காலையிற் பாடங்கற்க
வாய்ந்தவர் தம்மை நன் னாட்கேட்கத் தேடுவ தாகுமலர்க்
காந்தளந் தேன்சொரி மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லேந்திழை யாளை மணஞ்செய்து கூடென்ற லின்னமுதே. ௬௫

பாங்கி தலைவியைக் குறியிடத்துய்த்து நீங்கல்.

பின்னிய கூந்தன் மயிலே யிருவரும் பேதமின்றி
மின்னிய லாக விளையாடு வோமிரு வேற்கருங்கட்
கன்னிய ராடச்செய் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பன்னிய மாலை கொடுவரு வேனிந்தப் பைம்பொழிற்கே. ௬௬

புணர்ச்சியின் மகிழ்தல்.

பீடுபெற் றார்சந் தனக்காவி யின்பம் பெருகவென்போல்
நீடுல கத்தினிற் பெற்றவ ரார்கோல்செந் நெற்கதலிக்
காடு நிறைந்திடு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பாடு மளித்திர ளாடு மலர்க்குழற் பைந்தொடியே. ௬௭

இற்கொண்டேகல்.

புனையு நவமணிப் பூந்திரு வேரம் புனத்திலுள்ள
தினையும் விளைந்தன கொய்வா ரெமரினிச் சேனுகளுங்
கனையொண் கடல்சூற்று மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பினையிங் கிருப்பதென் னேசெல்லு வோநம் பெரும்பதிக்கே. ௬௮

பாங்கியாடிடம் விடுத்துக்கொண்டகறல்.

பூவிற் செறியும் புனங்காள் புனத்துறை பூங்கிளிகாள்
ஆவித் துயருட னன்பர்வந் தாலச வாமன்மலர்க்
காவிற் குயினிறை மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
வாவிக் கயலுகழ் சேறாரைத் தேடி வரச்சொலுமே. ௬௯

தலைவன் வரும்புனநாடி மறுகல்.

பெண்ணா ரிளமையிற் சாயலெங் கேயவர் பேச்செங்கே
விண்ணா ரிதணுங் கவணுமெங் கேமத வேளைநெற்றிக்
கண்ணா லெரித்தவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பண்ணார் மொழிக்கிளி காவலி காள்சொலும் பண்புறவே. எ0

இறைவ னுளத்தொடு நொந்து வினுதல்.

பேசிக் கலந்தநு போகாதி போசம் பெருகிடவே
நேசித் திருக்கின்ற நேசத்தி லேகதி நீடுமந்தக்
காசித் தலம்புகழ் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லூசிக் கிருகயி றாயினவே நம தூழ்வினையே. எக

இறைவிக் கவன் வர வறிவுறுத்தல்.

பையா டரவ மணிவெயிற் காட்டப் பதுமமலர்ச்
செய்யா ளுறையுந் திருமார் பிறைவர்முன் சிந்துரத்தைக்
கையாற் கிழித்தவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மையா ரிருளில் வழிதேடி யிங்ஙனம் வந்தனமே, எஉ

வண்டுறை தாரோன் வந்தெதிர்ப்படுதல்.

பொன்னே மணிவிளக் கேகதிரன்றிப் புறப்படவே
இன்னேரம் பங்கய மார்திறந் தார்நவ ரத்நமணிக்
கன்னேர் மதிற்சுற்று மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
முன்னே செயுந்தவ மென்னே யெனக்கின்று முன்னின்றதே. எங

தலைமகள் நெறியினதருமை நினைந்திரங்கல்.

போர்செயும் வேழமுஞ் சிங்கமு மாளியும் பொங்கரவுஞ்
சூர்செயும் வேங்கையும் வாழுமிக் கானிடைத் தொல்புவிக்குட்
கார்செயும் பூம்பொழின் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லார்செய்த மாதவ மோவந் தனையெங்க ளாண்டகையே. எச

போதற் குடன்படுதல்.

பௌவக் கடற்கதிர் தோன்றுமுன் னேநும் பதியடைதற்
கிவ்வற் பொழுதினி லேசெ லுவாயினி யென்மனதிற்
கௌவைப் படுவது மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
கொவ்வைக் கனியிதழ் மின்னு ளையுங்கொண்டு கொற்றவனே. எரு

உடன் போக்கு.

மனையார வார மடங்கிய பின்னை வளர்த்தெடுத்த
வனையா ளவளு மறியாம லேவல் லரையிருள்வாய்
கனையார் கலிசுற்று மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
றனையா தரிக்கு மகிழ்நர்பின் னேகின டார்குழலே. எசு

தலைவன் தலைவியை வரைந்திருத்தல்,

மாவே ழவனெழு முன்னேதன் மாநகர் வந்துபுகுந்
தேவேத நூலி னெறியினிற் கைபற்றி யெட்டுதிக்குங்
காவே விளங்கிய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
கோவே யிவரென வேவாழ்ந் திருந்தருள் கூர்ந்தனரே. எஎ

மிக்கோரேதுக் காட்டல்.

மிகநக நாடி வருமன்னை யேபிணி மீளுமங்கங்
ககமகிழ் கால பருவந் திருவிளை யாடிலனோ
கநக மேனியர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மகவென வோடத் தொடர்ந்தது வோசொலும் வாரிதியே. எஅ

தலைவி பாங்கிக்குத் தன்னிலை உணர்த்தி விடுத்தல்.

மீளியு நானு மருங்கான் கடந்துபொன் மேடைசுற்று
மாளிகை மேவி மணந்திங்ஙன் வாழ்வதை வாதுக்கன்று
காளியோ டாடிய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
னீளிய வேல்விழி யீரெந்தன் பாங்கிமுன் னீர்சொலுமே. எகூ

தலைவி வாழ்க்கை செவிலி கேட்டு வாழ்த்தல்.

முருகக் கடவுளும் வள்ளியு மென்னநம் மொய்குழலை
பெருகப் பொருநர் மணந்தவை வந்தவர் பேசவில்வேள்
கருகச் சிவந்தவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லிருகட் புனலொழித் தன்னையர் வாழ்த்தின ரின்பமுற்றே. அ0

பாங்கி இறைவனைப் புகழ்தல்.

மூவாறு பண்ணு மிசைக்குமன் னுவெங்கண் மொய்குழலோ
டேவாழும் வாழ்க்கையை யானே புகழ விரவிசுற்றுங்
காவால் விளங்கிய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
னுவா யிராமனந் தன்போற் படைத்தில னுன்முகனே. அக

*இறைவன் பாங்கியைப் புகழ்தல்.*

மென்மேற் பரிவு மிகவே விளைக்குமிம் மெல்லியலை
யென்மேற் பரிவுடன் கூட்டிய தால் வரையேந்துமரக்
கன்பேற் பரிவுற்ற மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லுன்மேற் பரிவு மறக்கொண் ணுமோமன மொண்ணுதலே. அஉ

*தலைவன் பிரிந்தமை பாங்கி யுரைத்தல்.*

மேர்தந்த சந்தும் கழைதந்த முத்தும் விரிபுனன்முந்
நீர்தந்த சங்கும் கொடுவர வேகினர் நீடுகனிக்
கார்தந்த சோலைசூழ் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
போர்தந்த வேற்கண் மயிலையிப் போதுன் புணர்முலைக்கே. அங

*பருவங் கண்டு பெருமகள் புலம்பல்.*

மைக்காலம் வந்துஞ் சொரியும் பனிவந்தும் வாடைவந்து
மிக்காலம் வந்துவந் தாரிலையேமழு வேந்திய செங்
கைக்கால காலனன் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லக்கால மிந்தச் சதிபாத கங்க ளறிந்திலமே. அச

*இகுளை வம்பென்றல்.*

மொழிநீர்மைதப்புவ ரோவிறை தேரின் முழக்கமந்தோ
பொழிநீர் முகிற்குல மன்றணங்கே செந்நெல் பூகங்கனற்
கழிநீர தால்விளை மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
விழிநீ ரொழிபுன லாடலர் சூட்டணி மேகலையே. அரு

*செவ்வணி யணிந்துதன் சேடியை விடுத்தல்.*

மௌவற் குருந்து முருந்துமொவ் வாநகை வாணுதருன்
யவ்வன மான தறிந்திட வேயிளந் தென்றன்மணங்
கவ்வி வரும்பொழின் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
செவ்வணி சூட்டி விடுத்தா டனதுயிர்ச் சேடியையே. அசு

*பிரிவாற்றாமை.*

மோகம் பொன்னைக் கொளும்பொது மாதர்த முன்றிற்புகார்
மேகம் பொன்னுகிலு மீளுவ ரோவட மேருசுற்றுங்
காகம் பொன்னாகிய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லாகம் பொன்னுவ தறிந்தும்பொன் னைசைக்ககன்றவரே. அஎ

தலைவி கொடுஞ்சொற் கூறல்.

யமுனைகங் காநதி காவேரி வைகை யதுவுமன்றிக்
குமரியி லாடக் குறித்தன சோமணங் கொண்டுதென்றற்
கமுகி லுலாவிப மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லமுதம் புளிக்கும் பலநாட் பழகிலெம் மாடவற்கே. அஅ

தலைவி முனிந்தவை பாணன் கூறல்.

யான்போய்ப் புகழ்ந்துரை யாழ்பூட்டி வாசித் திருந்துநின்பேர்
தான்போ யுரைத்தன ளேவில்லை யோதலை யோடுதப்பிக்
கான்போத விழ்ந்திடு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மான்போத வீசுகல் லாற்சுரை யோடு வணையற்றதே. அகூ

வன்புறை கொடுத்தல்.

யூகத் திரள்வரை பாயக் கனிக ளுடைந்துசிற்று
றுகப் புனல்பொங்கு நாடன்றந் தானன் றரசெனநீர்க்
காகத்தை வாழ்வித்த மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
ளுகத்தை நேரல்கு லாகத்துக் கான நவமணியே. கூ0

புணர்ச்சியின் மகிழ்தல்.

யோகா திபர்க்கு நலமே விளைப்பவ ருற்பனத்தை
வாகாக வேகண் டறிந்துகொண் டேனம வாதைக்கரு
காகாத மேனியர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
போகாதி போகங்க ளுள்ளதெல் லாமிப் புணர்ச்சியிலே. கூக

என்பொருட் பிரிவுரை எந்திழைக் கென்றல்.

யௌவன மான தனத்தாரப் பூண விருநிதியம்
பௌவம தேறிக் கொடுவரு வேன்றமைப் பாடுமன்பர்
கௌவை யுருதருண் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
செவ்வன வேல்விழி யாய்மொழி யாயுங்கள் சேயிழைக்கே. கூஉ

தலைவன் பிரிவு பாங்கி விலக்கல்.

வரைநாடுந் திண்புய மன்னவ ரேகி வருவரென்ற
வுரைநாடு மட்டும் பொறுத்தன ளோபுக ழோங்குமெழு
கரைநாடும் போற்றிய மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
லிரைநாடும் வேல்விழி யாளுயிர் காப்பதற் கென்கடனே. கூந

### பாங்கிக்குத் தலைவன் பிரிவு உடன்படுதல்.

வார்முந்து பூண்முலை யாடனைக் கூடி மதன்கலவிப்
போர்முந்த வேலிளைப் பித்த வுனக்கிப் பொழுதரிதோ
கார்முந்திய பொழின் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பி
னீர்முந்து கண்ணி யுறுந்துய ராற்றுத னேரிழையே. ௬௪

### வெள்ளணி யணிந்து மெல்லியல் விடுத்தல்.

விண்ணா யிரந்தொழு வெள்ளிவெற் பாமென வெள்ளிவெண்பூ
வெண்ணா யிரம்பெற்ற தூசு சங்கம்முத் திவைபுனைந்து
கண்ணா யிரன்றொழு மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பண்ணா யிரம்பயில் பெண்ணாள் விடுத்தனள் பாங்கியையே. ௬௫

### தலைவன் வெற்றிமைகண்டு தலைவி வினாதல்.

வீசிய வாசமும் மார்பினில் ரேகையு மெய்நிறையப்
பூசிய சாந்தும் புளகித மாகப் புணரிசுற்றுங்
காசினி யோர்புகழ் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பின்
மாசிய ஞானைக் காணவென்றோ வெதிர் வந்தனையே. ௬௬

### பாலனைப் பழித்தல்.

வெல்லமும் பாலு மெனவே யிருந்தநம் வேந்தர்தமை
யில்லமும் பாயலு மொன்றிரண் டாக்கினை யின்பிரதங்
கல்லணி கோபுர மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
செல்வமு மாவியுந் தந்திட வந்த சிறுகளிறே. ௬௭

### தாமக்குழலியைப் பாங்கி தணித்தல்,

வேட்கை யெண்ணிரண் டாயிர மாதரை வேட்டுமவ
னோடன் புறவிருந் தாளிலை யோதிரு வூர்பணிலங்
காடெங் கணுங்கின்ற மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
கோடன் புறமுலை மாதணங் கேதணி கோபத்தையே. ௬௮

### தலைவன் வரவு தலைவி எதிர்கொண்டல்.

வையம் புகழ்மன்னர் வந்தா ரெனவெதிர் வந்தபினி
செய்யம் புயக்காத் தேந்திவந் தாள்கச் சிமிழுலைகொங்
கையம் புறப்புணர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பிற்
பையம் புயங்க மணிப்பணி பூணும் பயோதரியே. ௬௯

### பாங்கி இல்லறம் வாழ்த்தல்.

வௌவ்விட வெண்ணும் பொருளெதெல் லாங்கொண்டு வந்துதினந்
தெவ்விட வையக மெல்லாம் புரந்துபுத் தேளிருய்யக்
கவ்விட முண்டவர் மோரூரிற் பாம்பலங் காரர்வெற்பில்
வெவ்விட மன்னகண் ணாருடன் வாழிசெவ் வேலவனே.

---

### நூற்பயன்.

கன்னல் வயற்செறி மோரூரிற் பாம்பலங் காரர்தம்மேற்
சொன்ன வருக்கத் தொடையொரு நூறுந் துதிப்பவர்தா
மன்னர் மதிக்கப் புவிமீதில் வேண்டும் வளமுடைத்தாய்ப்
பின்னம ரர்க்குங் கிடையாப் பதவி பெறுகுவரே.

மோரூர்ப் பாம்பலங்காரர் வருக்கக்கோவை,
முற்றுப்பெற்றது.